நாள்.17.07.2025.

அசல் வழக்கு எண்.103/2017

வா சா.2

பெயர்.சுப்புலெட்சுமி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

11, 13 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆன உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொது கோவில் என்று முத்துவடிவம்மாள் கோவிலை இந்து அறநிலைய துறை ஆணையர் அறிவித்து உத்தரவிட்டதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் அசல் மனு 3/2010 கொடுத்து அது சம்பந்தமாக அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

மேற்படி மனுவில் எங்களையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என மனு எதுவும் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த மனுவின் முடிவில் பட்டர்புரம் பண்ணை அறக்கட்டளை சம்பந்தமாக நிர்வாக திட்டம் வகுக்கபட்டு திருநெல்வேலி மாவட்ட அரசிதழில் வெளியிடபட்டது என்றால் சரிதான். 2011 லேயே மேற்படி அறிவிப்பு வெளியிடபட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து துறை ரீதியான நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கு சொத்துகள் பட்டர்புரம் பண்ணை அறக்கட்டளைக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டவை என்பதற்கான ஆதரங்கள் எவையும் நீதிமன்றத்தில் நான் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் ஆங்கிலேயர் காலத்திலேயே இனாமாக தர்மகாரியங்களுக்காக வழங்கபட்ட சொத்துகள் என்றால் சரியல்ல, எங்களுடைய பூர்வீக சொத்தாகும். பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வள்ளியூர் சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாக அதிகாரியை தக்காராக நியமனம் செய்து 2004 ம் ஆண்டுலேயே உத்தரவு பிறப்பிக்கபட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கில் உள்ள கோவில்களுக்கு அரண் காவலர்கள் நியமனம் செய்யபட்டு இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, நாங்கள் தான் பரம்பறை அரண்காவலர்கள். நாங்கள் பரம்பறை அரண்காவலர்கள் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

05.05.1949 ல் போர்டு ஆர்டர் 2364 ன் படி மேற்படி திருக்கோவில் பட்டர்புரம் பண்ணை குடுமபத்தினருக்கு தான் உரிமை மற்றும் அனுபவம் உள்ளது என்று உறுதி செய்யபட்டதாக வழக்கில் நான் சொல்லி இருப்பது உண்மை அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆர்டர் எண் திருக்கோவிலுக்கான சொத்து பதிவேடு அங்கீகரிக்கபட்ட எண் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மனு 3/2010 ல் உள்ள உத்தரவு அறநிலை துறை அதிகாரிகள் கூட்டாக சேர்ந்து 1 முதல் 5 ம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஏற்படுத்தினார்கள் என்று நான் வழக்கில் சொல்லி உள்ளேன். அதற்கு ஆட்சேபனை தெரிவித்து நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் அறநிலைய துறையில் மனு கொடுத்துள்ளேன். நான் சொன்னது படி எந்த மனுவும் கொடுக்கவில்லை என்று ஆட்சேபனையோ மேல்முறையீடோ செய்யாமல் இருந்துவிட்டு இப்போது இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து இருப்பது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி திருக்கோவில் அரங்காவலர் நியமனம் செய்யபட்டு வழக்கு தபசில் சொத்துகளையும் பட்டர்புரம் பண்ணை சொத்துகளையும் அதனுடன் இணைந்த திருக்கோவில்களையும் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

கிறிஸ்துவ மதபோதகர் பிரேபஸ் என்பவருக்கு பட்டர்புரம் பண்ணை சொத்துகள் எங்கள் குடும்பத்தினரால் விற்பனை செய்யபட்டது என்றால் சரியல்ல. 2015 ல் தோத்தாதிரிநாதர் திருக்கோவில் சொத்துகள், ஆதிநாதர் ஆழ்வார் கோவில் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துகளை எங்கள் குடும்பத்திற்கு மாற்றி தர சொல்லி 1 ம் வாதி மனு கொடுத்து இருக்கிறார் என்றால் சரிதான். அதன் மீது முடிவு எடுக்க சொல்லி உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்த விவரம் எனக்குதெரியாது. அந்த மனு மீது அறநிலை துறை அதிகாரிகளால் என்ன நடவடிக்கை எடுக்கபட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 11, 12 ம் பிரதிவாதிகளின் உத்தரவை எதிர்த்து அறநிலைய துறை ஆணையாளரிடம் தான் மேல்முறையீடு செய்ய முடியுமே தவிர நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் அறநிலைய துறை அதிகாரிடம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்தேன்.

அறநிலைய துறை ஆணை சட்டத்தின் படி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றால் சரியல்ல. இனாமாக தர்மகாரியங்களுக்காக கொடுக்கபட்ட சொத்துகளை எங்கள் தனிபட்ட சொத்துகளாக பிறருக்கு விற்று லாபம் அடையும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்ட பரிகாரம்

கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.19 11:48:47 +0530